இராமாயணம் இந்நாட்டு மக்களின் இணையற்ற செல்வமாம்!

காற்றும் நீரும் போலக் கருதற்பாலதென்கிறார்

ஆனாலும் இராமனும் சீதையும் மனிதர்கள்தானாம்!

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை ஒரு அணா | இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. **MALAI MANI**

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (9—4—50) வெளியூர் (10—4—50) [இதழ் 219

இராமாயணத்துக்குப் புது முலாம் பூசுகிறார் ஆச்சாரியார்!

"வால்மீகி கண்ட இராமன் தெய்வத்தன்மை வாய்ந்தவனா, அல்லது கம்பன் கண்ட இராமன் தெய்வத்தன்மை வாய்ந்தவனா, இன்றேல் இராமன் சாதாரண மனிதனா என்ற ஆராய்ச்சிகளில் சிலர் ஈடுபட்டு கஷ்டப்படுகிறார்கள், ஆனால் என்னைப் பொறுத்தவரையில் எனக்கு இந்தக் கவலையே கிடையாது. இராமாயணக் கதைச் சிறப்பு, அது தரும் நற்போதனைகள் இவைகளையே நான் அனுபவிக்கிறேன். இராமனும் சீதையும் சாதாரண மனிதர்களே, அவர்களுடைய நற்குண நற்செய்கைகள் வரவேற்கத் தக்கவை என்ற அளவிலே நான் திருப்தி யுறுகிறேன். அவர்களுடைய நற்பண்புகள் காரணமாகவே இன்றுவரை மக்கள் இராமாயணத்தைப் பாராட்டி வருகிறார்கள். அதனாலேயே இன்றளவும் இராமாயணம் உயிரோடு இருந்து வருகிறது."

என்று தோழர் இராஜகோபாலாச்சாரியார் அண்மையில் தியாகராயநகரில் கம்பர் விழாவில் பேசியபோது குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"இராமாயணம் என்னும் [illegible] ...டியாமலிரு... [illegible] எம் இரா... [illegible] ...கவில் இராமன், சீதை ...யாருடைய நற்பண்புகள் விளக்கப்பட்டிருப்பதி[illegible]லேயே அரசியலில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், இராமாயணம் மட்டும் இன்றளவும் எத்தகைய மாறுதலுக்கும் உட்படாமல் உயிரோடு இருந்து வருகிறது. இப்படியாக இராமாயணம் என்பது நமது வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் காற்றும், நீரும் போன்றதாகும். இது நமது பரம்பரைச் சொத்து; இதற்கு ஈடான சொத்து வேறெதுவும் இருக்க முடியாது" என்றும் பேசியிருக்கிறார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இராமாயணமே இந்தியரின் பண்பாட்டை விளக்க வல்ல நூல், இந்தியக் கலாசாரம், ஒழுக்கம் முதலியவைகளை உள்ளடக்கியுள்ளது இராமாயணம். அது இந்தியர் வாழ்க்கையில் ஒரு பகுதியாகும். வால்மீகியையும் கம்பரையும் பெற்றிருப்பது குறித்து நாம் பெருமை யடையவேண்டும். வால்மீகி கம்பர் போன்ற புலவர்களின் நூல்களைப் போற்றி வளர்க்க வேண்டுவது உங்கள் கடமை. வடநாட்டில் துளசிதாஸ் இராமாயணம் பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. அந்த அளவுக்கு தென்னாட்டிலும் இராமாயணம் போற்றப்பட வேண்டும்."

என்று பேசியுள்ளார். இராமாயணம் இந்நாட்டு மக்களுக்கு பரம்பரைச்சொத்தாம்! காற்றும் நீரும்போல இன்றியமையாது வேண்டப்படும் பொருளாம்! என்னே அழகு! எத்துணை ஆராய்ச்சியுரை! எவ்வளவு தந்திரமொழி! எத்தனை வளைவு நெளிவுகள்! ஆகா! ஆச்சாரியாரின் திறமை பேர் திறமை! ஆனால் நல்லறிவும், பகுத்தறிவும் கலவாத திறமை!!

[illegible] ...ராமாயணம் கவினுடையதாக இருக்கலாம், சுவை சொட்டச் சொட்ட அமைந்திருக்கலாம். ஆனாலும் நல்லறிஞர் பலரின் நற்சான்றை அது பெறவில்லை. காரணம், கம்பனின் கவித்திறம் இந்நாட்டு மக்களின் கருத்துக்கு மாறுபட்டிருப்பதேயாகும். எனவேதான், கம்பராமாயணம் கண்டிக்கப்பட்டு வருகிறது. இது நாடறிந்த செய்தி. ஆச்சாரியாருக்குத் தெரியும். தெரிந்திருந்தும் இராமாயணத்தைக் காற்று என்றும் நீர் என்றும் ஏற்றிப் புகழ்கிறார். என்னே விந்தை! காற்றும் நீரும் மக்களுக்கு எத்துணை இன்றியமையாப் பொருள்கள். அவற்றை இராமாயணத்துக்கு உவமையாக காட்டுவதன் மூலம், அந்த இயற்கைச் செல்வங்களின் பண்புக்கும் பயனுக்குமன்றோ இழுக்கு தேடுகிறார் ஆச்சாரியார். இதனை என்னவென்பது? ஆசையென்பதா அறியாமை என்பதா?

அது மட்டுமல்ல. இராமனையும், சீதையையும் மனிதர்களாகவே மதிக்கிறாராம் அவர். நன்று! ஆனால் இன்றையத் தினம் நாட்டில் எத்தனைபேர் இதனை ஏற்றுக்கொள்ளக் கூடும்? அதிலும் பாமரமக்களை மிகுதியாகக்கொண்ட இந்நாடு இராமனைப் பரமனாக நினைத்துப் பஜனை செய்தும், ஆங்காங்கு இராமன் பெயரில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு ஆராதனை, வழிபாடு, காலக்ஷேபம் இன்னபிற காரியங்களைச் சரிவர செய்துவரும் நிலையில், எப்படி இராமன்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

பிரசாரத்துக்கு 25 லட்சம்!

1948-49-ல் வெளிநாடுகளில் பிரசாரம் செய்வதற்காக இந்திய அரசியலார் செலவிட்ட தொகை ரூபாய் 25 35,210!

அந்நிய நாடுகளின் தூதுவர்களை வரவேற்பதில் செலவிடப்பட்ட தொகை ரூ. 151 597!

இரயில்வே போக்குவரத்து அதிகரிப்பு

1950 பிப்ரவரி மாதத்தில், இந்திய இரயில்வேக்களில் 354 தனி வண்டிகள் விடப்பட்டன. அவற்றில் 137 வண்டிகள் பொதுச் சரக்குகளையும், 53 வண்டிகள் உணவுத் தானியங்களையும், 43 வண்டிகள் மாங்கனீஸ் கனியையும் 29 வண்டிகள் சணலையும், 32 வண்டிகள் உப்பையும், 7 வண்டிகள் சிமிட்டியையும், 6 வண்டிகள் ஜவுளிகளையும், 7 வண்டிகள் இரும்பு எஃகையும். ஒரு வண்டி சர்க்கரையும் ஏற்றிச்சென்றன.

பஞ்சாலையில் தீவிபத்து

ரூ. 3 லட்சம் நஷ்டம்

ஆமதாபாத், ஏப். 6— பஞ்சு அடிக்கும் ஆலையில் தீ விபத்து ஏற்பட்டது. இதன் விளைவாக 3 லட்சம் ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டது.

தீயை அணைக்கும் முயற்சியில் நான்கு பயர்மென்கள் காயமடைந்தனர்.

தீ 8 மணி நேரம் எரிந்துகொண்டிருந்தது. பகுதி மேல்கள் சாம்பலாயின.

சென்றவாரத் தொடர்ச்சி

அவல வாழ்வு!

[நு. சி. வே.]

இதென்ன கிணறு வெட்ட பூதம் புறப்பட்டக் கதை போலிருக்கிறதே என்று எண்ணித் திகைத்தார். அக்கடிதம் கனவல்லியின் கடிதம் என்றறிந்த அளவிலே முதலில் மகிழ்ச்சிகொண்டாரெனினும் கவலைமிக்க சூழ்நிலையில் காதல் கடிதம் கிடைத்ததானது அவரது நிலையை மேலும் மோசமாக்கிவிட்டது. அவருக்கு இன்னது செய்வதென்றே புரியவில்லை. காதலைக் கவனிப்பதா, கடமையைக் கவனிப்பதா; வீட்டை நினைப்பதா, ஏட்டைப் பார்ப்பதா; அன்றி கடன்காரர்தொல்லையைச்சமாளிக்கத் திட்டமிடுவதா, எதைச் செய்வது, நேரமோ விரைந்துசென்றுகொண்டிருக்கிறது.

பார்த்தார் அநாமதேயம்; அச்சமயத்தில் வேறெதைப் பற்றியும் சிந்திப்பதிலோ, கவலைகொள்ளுவதிலோ பயனில்லை. ஆகவே, எடுத்த வேலையை முடிப்பதே தனது முதற் கடமை என்ற முடிவுக்கு வந்தார்.

சங்க இலக்கியத்திலிருந்து சில கருத்துக்களை அடிப்படையாகவைத்து "காதல்" என்ற தலைப்பில் மளமளவென்று ஒரு கட்டுரை வரைந்தார். காத்துநின்ற சம்பாசிடர் கந்தசாமியிடம் கொடுத்தார்.

எதைஎழுதுவதஎப்படிஎழுதுவதுஎன்கின்றதீராதபிரச்னை ஒருவாறு தீர்ந்தது. எவ்வளவுக்கெவ்வளவு எழுத கஷ்டப்பட்டாரோ அவ்வளவுக்கவ்வளவு எளிதிலும், விரைவிலும் கட்டுரை முற்றுப்பெறலாயிற்று. 'கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டிவிடால், மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்' என்று புரட்சிக் கவிஞர் கூறியுள்ளது போல், தோழர் அநாமதேயத்தின் அன்றைய வேலை, கனகவல்லியின் கடிதம் கண்ட காரணத்தால் அரைமணி நேரத்தில் முடிந்துவிட்டது. 'கண்ணின் கடைப்பார்வை' என்றார் புரட்சிக் கவிஞர். ஆனால் இங்கு தோழர் அநாமதேயத்தின் மீது அவரது காதலி செலுத்தியது அத்தகைய கடைப்பார்வையல்ல. கருத்துமிக்க கடிதமே!

அக்கடிதத்திற்கு என்ன பதில் எழுதுவது, கனகவல்லியின் கவலையை மாற்றுவது எப்படி என்ற எண்ணங்களின் கூட்டுத் தொகுதியே அன்று அவர் எழுதிய காதல் பற்றிய கட்டுரை கனகவல்லிக்கு எழுதவேண்டிய கடிதம்தான் கட்டுரையாக மாறிற்று. ஆகவே தனது கட்டுரைக்குக் காரணமாயிருந்த கனகவல்லிக்கு நன்றிசெலுத்த வேண்டியவரானார், ஆசிரியர் அநாமதேயம். உடனேமேசை மீது கிடந்த கடிதத்தட்டொன்றை எடுத்துப் பின்வருமாறு எழுதலானார்.

அன்புள்ள கனகா!

நல்ல சமயத்தில் உன் கடிதம் கிடைத்தது. நமது காதல் பிரச்னை தீருவது ஒருபுறமிருப்பினும், உனது காதல் கடிதத்தால் எனது இன்றைய எழுத்துப் பிரச்னை தீர்ந்தது. உன் கடிதத்தின் எதிரொலியாக இன்று 'காதல்' என்னும் கட்டுரை ஒன்றை இவ்வார 'விசித்திரத்'தில் வரைந்துள்ளேன். படித்துப் பார்த்து உனது கருத்தைத் தெரிவி. உனது கடிதத்திற்கு எனது நன்றி காலத்தில் செய்த உதவி ஞாலத்தினும் பெரிதல்லவா? பிற பின்.

உனது அன்பிற்குரிய
அநாமதேயம்

என எழுதி அக்கடிதத்தை உறையுள் போட்டு, அவசரமாக அன்றைய தபாலிலேயே அனுப்பிவிட்டார். கடிதத்தைத் தொடர்ந்து ஆசிரியரின் மனமும் மங்களபுரி நோக்கிப் புறப்பட்டது. கடிதம் கண்டு காரிகை என்னென்ன என்னுவாள் என்பதைத்தானே எண்ணி எண்ணிப் பார்த்தார். இங்ஙனம் ஒருவாறு மானசீக யாத்திரையிலேயே அன்றைப் பொழுதைக் கழித்தார். நாட்கள் சில நடந்தன.

* * *

வழக்கம்போல் ஓர் நாள் ஆசிரியர் அநாமதேயம் தபால்களைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருக்கையில், கனகவல்லியின் கடிதமும் இருக்கக் கண்டார். அவசரமாக அதனைப் பிரித்துப் படித்தார் அதில்,

அன்பரே!

தங்கள் கடிதம் கிடைத்த கடிதத்தில் கண்டுள்ள விஷயம் என்னை மேலும் கவலைக்குள் ஆழ்த்துகிறது எனது வேதனை தங்கட்கு வேடிக்கையாக இருக்கிறது போலும். நமது காதல் பிரச்னை தீருவதற்குப் பதிலாக, தங்களுடைய எழுத்துப் பிரச்னை தீர்ந்துவிட்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறீர்கள். இது தங்களைப் போன்ற ஒரு ஆசிரியருக்கு இருக்கக் கூடாத பண்பு என்பதை அறிந்து மிக மிக வருந்துகிறேன்.

அதே சமயத்தில் 'காதல்' என்னும் தலைப்பில் தாங்கள் தீட்டியுள்ள கட்டுரையையும் கண்டேன். சங்க இலக்கியங்களினின்றும் மேற்கோளாகத் தந்துள்ள செய்யுட்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. ஆனால், அதே நேரத்தில்அத்தகைய காதல் வாழ்வு நம் விஷயத்தில் பாலைவன வாழ்வாக இருப்பது குறித்து வருந்தினேன், நமது கூட்டுவாழ்க்கைக்கு குறுக்கே நிற்பது வைதீக புரியில்வாழும் எனது பெற்றோர்மாத்திரமே அன்று தங்களுடைய வாழ்க்கை நிலையும் ஒரு காரணமாகத் திகழ்கிறது என்பதையும், ஒருவாறு தங்களுடைய கட்டுரையின் மூலம் தெரிந்துகொண்டேன். அன்பரே, கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன் அதாவது, தாங்கள் கூறும் சங்ககால காதல் முறை இக்காலத்துக்குப் பயன்படாது எனவே, ஏதேனும் ஒரு புரட்சி வழிகாண முயலுங்கள் பிற பின். வணக்கம்.

தங்கள் அன்பிற்குரிய
கனகவல்லி.

என்றுஎழுதப்பட்டிருந்தது கடிதத்தை திருப்பித்திருப்பிப் படித்தார்அதற்குஎன்னவிடை தருவதென்றே புரியாமல், கடிதத்தைமடித்து சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு, மற்ற அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தார்.

இங்ஙனம் ஆசிரியர் அநாமதேயத்தின் வாழ்க்கை காதல், கடமை, கவலை முதலியன கலந்த ஒரு விசித்திர வாழ்க்கையாக இருந்து வந்தது.

மேலும் சில நாட்கள் கடந்தன. வழக்கம்போல் ஓர் நாள் 'விசித்திரம்' இதழுக்கு விஷயம் தேடும் முயற்சியில் ஆசிரியர் ஈடுபட்டிருந்தபோது, அன்றைய தபாலில் 'அவல வாழ்வு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை இருக்கக் கண்டார். கட்டுரையின் தலைப்பு ஆசிரியரின்கருத்தைக் கவர்ந்தது. படித்துப் பார்த்தார். சுவை தட்டிற்று மேலும் படித்தார்; அருமையான கட்டுரை என தனக்குள்ளேயேசொல்லிக்கொண்டார் இத்தனைக்கும் காரணம், அக்கட்டுரை நாட்டு நிலை, மக்கள் நிலை ஆகியவற்றை அழகுற சித்தரித்துக்காட்டுவதாகவே இருந்தது. அதுமட்டுமல்ல, ஏறக்குறைய அவரது வாழ்க்கை நிலையும் அக்கட்டுரையில்பிரதிபலித்தது. இதை கண்டு ஆசிரியர் ஆச்சர்யமுற்றார். இத்தனை சிறந்த முறையில் [illegible] கட்டுரை தீட்டிய அக்கட்[illegible]ளர் யார், அவரது [illegible] என்ன என்று ஆ[illegible]புகுந்தார். கட்டுரையோடு இணைக்கப்பட்டிருந்த கடிதத்தைப் பார்த்தார்.

"மாணிக்கவாசகன், மதுர விலாசம், குற்றாலம்" என்று எழுதப்பட்டிருந்தது. பின்னர் கடிதத்தையும் படிக்கப்பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது,

ஆசிரியர் 'விசித்திரம்'
புதுவைமபுரி

அன்புடையீர்,

இத்துடன் 'அபல வாழ்வு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை இணைத்துள்ளேன். பிரசுரிக்க தகுதி உடையதாயின்பிரசுரிக்கவும் இன்றேல் தயவு செய்து திருப்பி அனுப்பிவிடவும். தபால்தலையும் வைத்துள்ளேன் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படுமாயின் தயவு செய்து கட்டுரை பற்றிய தங்களுடைய கருத்துரையை எனக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். அது இயலவில்லையாயின், தங்களை சந்திக்க ஏற்றகாலம், இடம், இன்னபிறவற்றைத் தெரிவிக்கவேண்டுகிறேன். ஏனெனில், நான் அடுத்த வாரத்தில் புதுவைபுரிக்கு வருவதாகத் திட்டமிட்டுள்ளேன். மற்றவை பின். வணக்கம்

அன்பன்
மாணிக்கவாசகன்

என்று எழுதப்பட்டிருந்தது இதைக்கண்டவுடன் ஆசிரியர் பெரிதும் மகிழ்ச்சியுற்று கட்டுரை தீட்டிய அக்கருத்தாளருடன் கடிதம் மூலம் பேசுவதைவிட, கண்டு உரையாடுதலே சாலச் சிறந்தது என்ற முடிவுக்குவந்தார் நல்லாரைக் காண்பதுவும் நன்று என்ற காரணத்தால். உடனே, ஒரு கடிதத்தில்,

பேரன்புடையீர்,

தங்களுடைய கட்டுரையும், கடிதமும் கிடைக்கப்பெற்றேன். நீண்ட கடிதம் எழுத அவகாசமில்லை எனவே தாங்கள் என்னைப் புதுவை புரி 'தென்றல் விடுதி'யில் மாலை 4-மணி முதல் 6-மணிக்குள் சந்திப்பது நன்று. மற்றவை நேரில். வணக்கம்

அன்பன்
அநாமதேயம்

என்று எழுதி மாணிக்கவாசகத்திற்கு அனுப்பினார்.

(தொடரும்)

தி. மு. கழக
தலைமைக்காரியாலயம்
கட்டட அமைப்புச் செலவுக்காக
தங்கள் அன்பளிப்பை
அனுப்பிவிட்டீர்களா?
இன்றே தருக!

பணம் அனுப்பவேண்டிய முகவரி:—
சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர், தி. மு. க. தலைமை நிலையம்
2/45 முத்துமாரிச் செட்டித் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

காலநிலைபற்றி கடிதில் கூறமுடியாது

லண்டன், ஏப். 8—

ராயல் வான ஆராய்ச்சி சங்கத்தின் நூற்றாண்டுவிழா சமீபத்தில் லண்டனில் கொண்டாடப்பட்ட விருந்தையொட்டி, பிரபல வான சாஸ்திரிகள், பிரிட்டனுக்கு விஜயம் செய்து இருக்கிறார்கள்.

உலகின் பல பாகங்களிலுள்ள கால நிலை, சீதோஷ்ணநிலை, இவைகளில் ஏற்படும் திடீர் மாறுதல்களைக் குறித்து இவர்கள் கலந்து ஆலோசிப்பார்கள்.

48 மணி நேரத்திற்கு முன்னதாக கால நிலை இப்படித்தான் இருக்குமென்று சொல்லவே முடியாது என்று, இவர்கள் ஏகமனதாக அபிப்பிராயம் கூறி[illegible]

27-வது தடவை தண்டிக்கப்பட்டான்!

மதுரை, ஏப். 8—

போலீஸ் லைனிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் கை கெடிகாரத்தையும், டிப்டி சூப்ரின்டென்டுக்குச் சொந்தமான ஜீப்காரிலிருந்து பல சாமான்களும் திருடினனென்று பிடிக்கப்பட்ட தவசி என்னும் முத்துக்கிருஷ்ணன் வலே 'மக்காத்' திருடனாக இருந்திருக்கிறான்.

இவனுக்கு மதுரை உதவி நீதிபதி தோழர் எஸ். வரதராஜுலு நாயுடுவால் 7 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இதுவரை 26 முறை இவன் தண்டிக்கப்பட்டிருக்கிறான்!

மலைப்பாம்பு முட்டை வெடிக்க 8 மாதம் ஆகும்!

லண்டன், ஏப். 8—

லண்டன் உயிர்காட்சி சாலையில் உள்ள 12 அடி நீளமான இந்திய மலைப்பாம்பு 20 முட்டைகளை இட்டிருக்கிறது. இம் முட்டைகள், குஞ்சு வெளிப்பட 8 மாதங்கள் ஆகுமாம்.

அர்ச்சகர் இறங்கிவிட்டார்!

வடசென்னையில் சஞ்சீவிராயன் பேட்டையிலுள்ள பக்தவத்சல பெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் திருவிழா நடக்கிறது. திருவிழா நேரத்தில் விக்ரகம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும் போது, இதுவரை 'பார்ப்பனர்கள்' விக்ரகத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பது வழக்கம்.

பொதுமக்கள் இதை விரும்பாததால் பேட்டை மக்கள் ஆயிரம்பேருக்குமேல் கையெழுத்திட்ட அறிக்கையொன்றுசென்றஆண்டுகோவில் [illegible] அனுப்பப்பட் [illegible] ஆலோ [illegible] அவர் வாக்களித்திருந்தார். அவர் வாக்களித்தபடி இவ்வாண்டு விக்ரகம் மட்டும் ஆட்களால் சுமந்து செல்லப்பட்டது. கோவில் 'அர்ச்சகர்' உடன் நடந்துவந்து ஆராதனை செய்துவருகிறார்!

வழக்கத்துக்குமாறாக 'ஆண்டவருக்கு' போலீஸ் பந்தோபஸ்து மிகவும் அதிகரித்திருக்கிறது.

இந்து சட்ட திருத்த மசோதா

இந்து சட்டத்திருத்த மசோதா ஆதரிப்புத் தீர்மானங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:—

Dr. B. R. AMBHEDKAR,
Law Minister,
Central Secretariat.
NEW DELHI.

ஷாங்காயிலிருந்து அந்நியர் வெளியேறுவர்

ஹாங்காங், ஏப். 8—

ஷாங்கேயிலுள்ள அமெரிக்கர், பிரிட்டிஷார் மற்றும் இதர அந்நியர் கப்பலில் வெளியேறிச் செல்வது பற்றி சீன கம்யூனிஸ்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுவருகிறது என்று, பிரிட்டிஷ் கடற்படை அதிகாரி ஒருவர் கூறினர்.

அங்கிள் என்ற பிரிட்டிஷ் கப்பல் இவர்களை ஏற்றிச்செல்வதற்காக ஷாங்கேக்கு வரும் என்றும், இதில் 1000 பேர் ஏறிச் செல்லலாம் என்றும் தெரிகிறது.

[கட்டுரை]

பிளாட்டோ

[தங்கவேலர்]

சிறையிலே சிரித்த முகத்தோடு—உ வுகிறார் ஆசிரியர்! வெளியிலே வி ்மும் உள்ளத்தோடு வீதிவீதியாக சுற்றி திரிகிறான் மாணவன்! கன் ஆசிரியருக்கு 'சிறைவாழ்வு' கிடைத்துவிட்டதே என்ற கலக்கத்தில் கண்ணீர் வடித்து நிற்கிறான். சிறையினுள்ளே ஆசிரியரின் அதரங்கள் நஞ்சுக் கோட்டையோடு கொஞ்சிப் பேசுகின்றன! சிறைக்கு வெளியே மாணவனுக்கு "நஞ்சுக் கோப்பையைப் பரிசாக பெற்ற நாத்திகனின் மாணவன்" என்று மக்களின் சு... சொல்.

இந்த நிலைமையைப் பொறுக்க முடியவில்லை மாணவனுக்கு. அநீதி... அக்ரமமான முறையிட்டான், ஏதோ அநாதை அலறுகிறானென அலட்சியம் காட்டிவிட்டனர் மக்கள்.

ஆடிப்பாடிச் சுற்ற உல்லாசப் பட்டு ஆபத்திலே சிக்கிவிட்டால்... கொஞ்சிப் பேசிய கோமளம் வஞ்சிக்கப்பட்டால்... என்னநிலை ஏற்படுமோ அதுபோல யிற்று மாணவனின் நிலை. அவன்மட்டிலே தென்றல் புயலாக மாறிவிட்டதைக் கண்டான்.

தான் பின்பற்றிய ஒரே ஆசிரியர், தனக்கு ஆசிரியராக இருக்கக்கூடிய யோக்யதையுள்ளவர் அவர் ஒருவரே, என்று எண்ணிக்கொண்டிருந்த மாணவனின் கண் முன்னரே, ஆசிரியருக்கு 'விஷகோப்பை' பரிசளிப்பு விழா நடந்தது!

இ... உருவம் மாணவனுக்கு! அறிவு மாடியின் முதல படியிலே கால் வைத்திருந்தான் ஆசிரியரின் முயற்சியிலே!

புதுவாழ்வுப் பாதையிலே அடி எடுத்து வைத்த இளங் குமாரியின் உள்ளம் என்னென்னவோ இன்பக் காட்சிகளை எண்ணி அலைமோதிக் கொண்டிருப்பதைப் போல இருந்தது மாணவனின் மனநிலை. புதுப்புது கருத்துகளை ஆசிரியரிடமிருந்து வாங்கி விழுங்கித் தன் அறிவுப்பசியைத் தீர்த்துக் கொள்ள முயன்றான்.

ஆனால் அதற்குள் ஆசிரியர் சாக்ரடீஸுக்கு, கிரேக்க அரசாங்கம் விஷக்கோப்பை பரிசளிப்பு விழா நடத்திவிட்டது.

பத்து வருடமாக அவரின் மாணவராகயிருந்து வந்த 'பிளாட்டோ' உள்ளமுடைந்தான்.

உள்ளமுடைந்தவன், ஊர் மக்களிடம் உண்மையை உரைத்தான், இவனை ஊரைவிட்டே விரட்ட எத்தனித்தனர். ஊர் மக்கள்!

...... அடிமையாகப் பிறவாமல் சுயேச்சையுள்ள குடும்பத்தில் பிறந்தேன். மிலேச்சனாக அன்னிய நாட்டில் பிறவாமல், கிரேக்கனாக இத்தேசத்திலே பிறந்தேன். பெண்பிறவி எடுக்காமல் ஆணாகப்பிறந்தேன். இவைகளுக்கு எல்லாம் மேலாக, சாக்ரடீஸ் காலத்திலே பிறந்ததே எனது பெரிய பாக்கியம்......

......என்று கூறி தன் நாட்டையும், நாட்டு மக்களையும் முன்னர் ஏற்றிப் போற்றியவன், தூறு எனக்கண்டு வெளியேறினான் பிளாட்டோ தன் நாட்டைவிட்டு!

......அக்ரமத்துக்கு இடமளித்து ஆதிக்கபுரியினருக்கு வாழ்வளிக்கும்— நாடே! நான வெளியேறுகிறேன் உண்மையை உணர முடியாத கிரேக்க மக்களே நீங்களொரு நெல்லிக்கய் மூட்டைகள்! கேட்டை அணைத்துக் கொள்கிறீர்கள்— நாட்டை அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்கிறீர்கள்! என் பணியைப் பயன்படுத்திக் கொள்ள உங்களுக்குத் துணிவில்லை—இனி எனக்கு இங்கு வேலையில்லை. போ என்று கூறினீர், இதோ போகிறேன் ......என்று கூறிவிட்டு, தான் பிறந்த பொன்னாட்டைவிட்டு வெளியேறினான் சாக்ரடீஸின் மாணவன் பிளாட்டோ!

அவன் நாட்டைவிட்டு வெளியேறும்போது அவன் வயது இருபத்தெட்டு! அதற்குப் பிறகு. இத்தாலி, எகிப்து போன்ற நாடுகளிலே அலைந்து திரிந்துவிட்டுத் தனது நாற்பதாவது வயதில் தான்பிறந்த பொன்னாட்டில் மீண்டும் அடி எடுத்துவைத்தான்.

தன் உழைப்பின் பயனை கிரேக்க நாடு அநுபவித்துத் தான்தீர வேண்டுமென்ற முயற்சியிலே.... பிளாட்டோ அழகான, குளிர்தருப்... யை அமைத்து அதிலே கிரேக்க இளைஞர்களைக் கூட்டி வைத்து, விவாதத்தை ஆரம்பித்துவைத்தான்!

நாளடைவிலே பிளாட்டோவின் புதுப்புது கருத்துகள், வலிவு உள்ளங்களைத் தழுவின. அதிகம்பேர் வந்துபோக ஆரம்பிக்கவே, குளிர் தரும் அந்தச் சோலை பள்ளியின தகுதியை அடைந்தது!

வேதமோதிகளுக்கு வேசனையளிக்கது இந்த நிகழ்ச்சி! விஷ விதையைத் தூவுகிறானென விஷமம் செய்துபார்த்தனர்! அந்த விஷமிகளுக்குப் பிளாட்டோவின புதுக்கருத்தால் விழிப்புற்றவர்கள் விளக்கங் கொடுத்தனர்.

சோலையிலே பள்ளி அமைத்து, அதிலே அறிவு கனிகளை மாணவர்களுக்கு எடுத்துக் கொடுத்ததோடு நிற்கவில்லை பிளாட்டோ! தன் சிந்தனையை நல்ல முறையிலே திருப்பி, பல ஆராய்ச்சி நூல் தீட்டி வெளியிட்டான்.

அவன் தீட்டிய ஏடுகளிலே முதலிடம் பெறுபவை... 'அன்பு' (Symposium) குடி அரசு' (Republic) 'அறிவும் எண்ணமும்' 'சட்டங்கள்' (Laws) என்பன...

மக்கள் அரசியலைப் பிளாட்டோ மிகமிகப் போற்றினான்! மக்கள் பிரதிநிதி யென பாசமொழி பேசிக்கொண்டு, ஆளத் தெரியாமல் ஆட்சியிலே அமர்ந்துவிடுவது எவ்வளவு ஆபத்தானது என்பதை பிளாட்டோ தனது நூலொன்றிலே, மிக விளக்கமாக எடுத்துக் காட்டுகிறான்.

நம் பழைய செருப்பைத் தைப்பதற்குத் தொழில் பழகிய சக்கிலியனிடமே கொடுக்கிறோம். ஆனால் ஆட்சியை நடத்தும் பெரிய பொறுப்பைப் பசப்பிப் பேசி ஓட்டைப் (Vote) பறிக்கும் வாயாடி இடத்துக் கொடுக்கிறோம். நோயாளி நன்கு பேசும் வைத்தியனைத் தேடுவானா? கெட்டிக்காரனைத் தேடுவானா? அரசு செய்யத் தக்கவர்களைக் கண்டுபிடிக்க வழி கூறுவதே அரசியல் விஞ்ஞானத்தின் முதல் வேலை...என்று மிகத் தெளிவாக அரசியல் போக்கை எடுத்துக்காட்டுகிறான் பிளாட்டோ.

மேலும், 'பணபலம்' பதவியிலே அமர்ந்துவிட்டால், ஏற்படக்கூடிய பாதகத்தை பிளாட்டோ (Republic) 'குடி அரசு' என்ற தனது நூலிலே ......"ஆசை செய்கைக்கு அடிப்படை ஆர்வம் அதனை வளர்க்கும், செய்கை பலவாகப் பயன்பட அறிவு வழி காட்டும், பொருளாதாரம் வளருவது ஆசையால்; பாதுகாப்பு ஆர்வத்தால்; ஞானம், பண்பு, விஞ்ஞானம் வளருவது அறிவால். அறிவுடையோரே ஆயத்தெரிந்தவர். ஆசை மிகுந்த வியாபாரியோ, வாள் பிடித்த போர் வீரனோ ஒரு நாட்டை நன்கு ஆள முடியாது"......என்று விளக்குகிறார்.

கவிதை எழுதுவதிலும் நல்ல தேர்ச்சியுண்... டோவுக்கு! "பிள... எங்கள் நாட்டவர், ... எழுதியகவிதைகளால்கிரேக்க இலக்கியம் மறுமலர்ச்சி பெற்றது," என்று இன்று பிளாட்டோவையும் அவன் கவிதைகளையும் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடும் கிரேக்கர்... அன்று...பிளாட்டோ கவிதைகளைத் தீட்டி "இதோ எனது புதுக்கவிதை" என்று கூறிடுமே, வெகுண்டெழுந்தனர் இன்றையகிரேக்கரின் முற்கால பரம்பரையினர் ...கவிதையெழுதி விட்டானாம் கவிதை. கல்லடியைப் பரிசாகக் கொடுங்கள் அதுதான் நாம் அவனுக்குக்கொடுக்கும் மாசற்ற மதிப்பு...என்று கேலிசெய்தனர்.

கல்லடியும், சொல்லடியும் காலவேகத்தில் மாறக்கூடியது என எண்ணித்தான் என்னவோ — உள்ளச்சோர்வின்றி தனது 80—வது வயது வரை தனது தள்ளாமை சிரத்தைச் சரத்திலே தாங்கி பிடித்துக் கொண்டே ...

மான்விழி மங்கையும், அந்த மங்கையின் தேன்மொழி கு... கெஞ்சி நின்றவனின் மனநிலைமையையும் நாடகமாகக் காட்டவில்லை பிளாட்டோ தன் ஏடுகளில். நடையும், நாட்டுமக்கள் செய்ய வேண்டுவதையும் தன் ஏட்டிலே தீட்டிக்காட்டினான். புராண போதை தரும் லேகியத்தைத் தன் புத்தகங்களிலே புதைத்துவைக்கவில்லை அவன். அவன் புத்தகங்கள் பழமைப் புழுக்களை...து உலகுக்கு முன்னேறும்பிள்ளையாக இருந்து அழைத்துச்சென்றன.

பிளாட்டோவின் ஆசிரியர் சாக்ரடீஸ் எந்தவிதமான ஏடும் தீட்டியவரல்ல! நடைப்பாதையிலே நின்றுகொண்டே மக்களை அழைத்து வைத்து, மணிக்கணக்காக விவாதம் நடத்திக் கொண்டிருப்பார். அவரது விவாதங்களும் அனுபவ உண்மைகளும்...இல்லைதான் நமக்குக் கிடைக்கின்றன-காரணம் சாக்ரடீஸின் அவர்கைப்படவே எழுதிய எழுத்தோவியங்கள் எழுதப்படாததாலேயே—சாக்ரடீஸின் அறிவு மாடி முழுவதிலும் உலவமுடியாதவர்களாக இருக்கிறோம்! ஆனால், அவரின் மாணவன் பிளாட்டோ ஏடு தீட்டிய தன் வாயிலாக ஆசிரியரையும் ஒரு படி மிஞ்சிவிட்டதோடு...... ஆசிரியர் விட்டுச்சென்ற குறையையும் இல்லாமல் பூர்த்தி செய்கிறான்.

நாலடுக்கு மாடியுடையான் போலல்ல— நாடோடிபோல! பக்கத்திலே பாவையை அமர வைத்து, அவளின் பணிமொழியை அருகேவிட்டல்ல- பக்கத்துணை தானும் தனது பகுத்தறிவுப்பிரசாரமும் தவிர யாருமின்றி...தன்வெண்தாடி காற்றிலே கலந்து உறவாட தன் மாணவரின் பகுத்தறிவு ட திப்பிகளைக் கேட்டு சிரத்தாளம்போட, நடைப்பாதையிலே உலவிக்கொண்டிருந்த ஆசிரியர் சாக்ரடீஸுக்கே "விஷக்கோப்பை" பரிசளிப்பு விழா நடந்ததென்றால்...நாம் பல படிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே ஏடுபல தீட்டிய மாணவன் பிளாட்டோவை விட்டுவைப்பரா கிரேக்கமக்கள்.

நல்லவேளை! ஆசிரியருக்கு அளித்த பரிசளிப்பு விழாவைப்போல, தனக்கும் அவ... நடத்துவதற்குள்ளே ...திக்கொண்டான் பிளாட்டோ.

தனது 80-வது வயதிலே தோழரொருவரின் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றிருந்த பிளாட்டோ— மாரடைப்பால் மரணமடைந்தான்! மங்காததங்கம் கிரேக்க சிங்கம்! அழியாதகாவலத்தை கிரேக்கர்களுக்கு மட்டுமல்ல-- உலகமானிட சமுதாயத்துக்கே அளித்துவிட்டு மறைந்தான். இன்று மலரும் "மனித முன்னேற்ற" மாளிகைக்குக் கால்கோளிட்டவர்களிலே பிளாட்டோவும் ஒருவன்.

விஞ்ஞானம் வேலைக்காரியாகிறது!

லண்டன், ஏப். 7—

வீட்டு வேலைகளை உடம்பு ஆடாமல் அசையாமல் செய்து முடிக்க சில நவீன மின்சார சாதனங்களை பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கம்பளங்களை சுருக்கி, வேண்டாதவைகளை நீக்க ஒரு இயந்திரம், குழந்தைக்குக் கொடுக்கும் பால் புட்டியிலுள்ள பால் எவ்வளவு நேரமானாலும் ஆறிப்போகாமல் இருக்க ஒரு கருவி இப்படியெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் தேங்காய் எண்ணெ

புதுடில்லி, ஏப். 7—

இந்தியாவுக்கு மொத்தம் தேவைப்படும் தேங்காய் எண்ணெய் 1 20,000 டன் என்றும் ஆனால் இந்தியா உற்பத்திசெய்வது 76000 டன் தானென்றும் பார்லிமென்டில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் வர்த்தக மந்திரி கே. ஸி. நியோகி அறிவித்தார்.

இந்தியாவிலிருந்து மாட்டிறைச்சியோ, செய்யோ ஏற்றுமதி செய்யப்படுவதில்லையென்று அவர் அறிவித்தார்.

ஆட்சியாளர்கள் கண் திறப்பார்களா?

சென்னைத் துறைமுக டிரஸ்டு தொழிலாளர் சங்கத்தின் 7-வது ஆண்டு அங்கத்தினர்களின் இறுதிப் பொதுக்கூட்டம் 30—3—50 மாலை 5-30 மணிக்கு போர்டிரோஜி வாதியின் உணவு விடுதியில் தோழர். எஸ். பி. பி. அந்தோணி பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் அந்தோணிப்பிள்ளை தலைவராகவும், தோழர் ஆர். கோபால் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு பதவியேற்றுக் கொண்ட தோழர் கோபால் அவர்கள் நன்றி கூறுமுகத்தான் பேசியதின் சுருக்கம்:—சென்னைத் துறைமுகத்தில் ஆள்குறைப்புத் திட்டம் அமுல் நடந்து வருகின்றது என்றும், அதே நேரத்தில் மற்றொரு புறம் தேவையற்ற இடங்களில் புதுப் புது உத்தியோகஸ்தர்களை அதிகப்படியான சம்பளத்திற்கு அமர்த்தப்படுகின்றார்கள்.மற்றொரு புறம் தேவையற்ற இடங்களில் பணம் பாழாக்கப்படுகின்றது என்றும், ரூபாய் 10000 ஆபீசர்களுக்கு என்று ஒரு புது கார் வாங்கப்பட்டுள்ளது என்றும் ராஜபூஷணம் அய்யர் எக்ஸிகியூட்டிவ் இஞ்சினியருக்கு 1200 ரூ. சம்பளத்திலிருந்து ரூபாய் 1300 ஆக உயர்த்தி உள்ளார்கள். மற்றொரு நம்பியார் என்ற ஆபீஸ் மேனேஜருக்கு 350 ரூ. சம்பளத்திலிருந்து 850 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதே போல் மற்றொரு ஆபீசர் கே. ஆர். சுப்பிரமணியத்திற்கு 350-லிருந்து 850 ஆக உயர்த்தத் திட்டமிட்டுள்ளார்கள் என்றும், இவற்றை எல்லாம் இங்குள்ள போர்டு மெம்பர்களும் மத்திய அரசாங்கமும்கண்ணை மூடிக்கொண்டு ஆள்குறைப்பு திட்டம் அமுலில் இருக்கும்போது இவற்றை எப்படி அனுமதிப்பது என்றுகூட எண்ணாமல் அனுமதி கொடுத்துவிடுகின்றார்கள் என்றும் பேசினார். அவர் மேற்கொண்டு பேசும்போது, இங்குள்ள உயர்தர உத்தியோகஸ்தர்கள் ஒரு மாவட்ட கலெக்டர் செய்கின்ற வேலை கூட இவர்களுக்கு இல்லை என்றும், ஆனால் இவர்களுக்கு சம்பளம் அதிகமாக இருக்கிறது. ஆகையால் இவர்களுக்குக் கொடுப்பது வீண் என்றும் கூறினார். இன்னும் இங்குள்ள கீழ்தர உத்தியோகத்தினர் (ஆபீசர்கள்) சேர்மேன் பதவிக்கு மோகங்கொண்டுள்ளார்கள் என்றும், அதற்காக அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்கின்றார்கள் என்றும், இனியாவது ஆட்சியாளர்கள் கண்ணைமூடிக் கொண்டிருக்காமல் துறைமுக நிர்வாகத்தில் தலையிட்டு சேர்மேன் பதவிக்கு நல்ல தேர்ச்சி பெற்ற கலெக்டர்களையோ, அல்லது வேறு ஐ. ஸி. எஸ். ஆபீசர்களையோ நியமிக்க வேண்டுமென்றும், மேகமிஷன் வந்ததால் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் தான் பயனடைந்தார்கள் என்றும், கீழ்தர சிப்பந்திகளுக்கு எதுவும் நன்மை கிடைக்காது என்றும், ஆகையால் இனியாவது இன்றைய ஆட்சியாளர்கள் கண் திறந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பின்னர் மூன்றாம் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

அமெரிக்கபெண்களுக்கு அதிக ஆயுள்

நியூயார்க், ஏப். 7—

அமெரிக்காவில் பெண்கள் பொதுவாக ஆண்களைவிட அதிக காலம் உயிர் வாழ்கின்றனர் என்று, சில புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஒரு வெள்ளை அமெரிக்கரின் வாழ்வு 65 வயது என்றும், வெள்ளை அமெரிக்க பெண்ணின் வயது 71 என்றும் இதிலிருந்து தெரியவருகிறது. இதற்குக் காரணம் தெரியவில்லை.

மூல நட்சத்திரம் ★

கடப்பூர் பாண்டியன்

காலைக் கதிரவனொளியில் மின் வெட்டுப்போல் பொன்னிறத்தில் வளைந்தோடிக்கொண்டிருந்தது தாமிரவருணி. சலசலவென இசைபாடி ஓடும் நீரில் மங்கை ஒருவள் சிந்தனைச்சுழலில் சிக்கியவாறு நீராடிக்கொண்டிருந்தாள். அவள் கை வளைகளும் நீருடன் சேர்ந்து சலசலத்துக் கொண்டிருந்தது. அவள் உள்ளமும் அதே நிலையில்தான் சஞ்சலமின்றிச் சலசலத்துக் கொண்டிருந்தது.

ஆம்! அவள் வீட்டிற்கு அன்று அவளைப் பெண்பார்க்க யாரோ வரப்போவதாக அப்பாவும் அம்மாவும் பேசிக்கொண்டிருந்தது அவள் நினைவிற்கு வந்தது. அவள் கருவிழிகள் நோக்கின. கண்ணீர் வெள்ளமும் சிற்றாறு போல், ஓடும் நீருடன் சேர்ந்தோடியது.

மங்கையின் மனக்கலக்கத்திற்கு மணப்பேச்சுத்தான் காரணம். பெண்பார்க்க வருவது முதல் முறையல்ல, பலமேர் பலமுறை வந்து போயிருக்கின்றனர். ஆனால் ஒருவராவது அவளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. ஏன்? அழகில் அழகுராணி, குணத்தில் குணக்குன்று, படிப்பில் மட்டுமென்ன குறைந்தவளா? பத்தாம் வகுப்பிலும் தேறியிருக்கிறாள். பின் ஏன் அவளை மணக்க எவரும் முன்வராமல் பின்னடைகின்றனர்? மூலமோ (அவதாரங்களின் மூலம்) பிராமணகுலம். பின் எதைக்கண்டு வேதம் பணவாளர்கள் மருண்டோடுகின்றனர், அதுதான் ஆச்சரியம். காரணம் அவள் மூல நட்சத்திரத்தில் பிறந்ததுதான். அதாவது பெண் மூலம் நிர்மூலம், பெண்கள் மூல நட்சத்திரத்தில் பிறக்கக்கூடாதாம். பிறந்தால் நாசமாகிவிடுமாம். இது வைதீகர்களின் கூற்று. நாமும் சமூகம்தான் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வழங்குகிறதென்றால், மூல நட்சத்திரமுமா அவ்வாறு வழங்க வேண்டும். ஆண்கள் மூலநட்சத்திரத்தில் பிறக்கலாமாம். ஆண்மூலம் அரசாளுமாம். எனவே அவளை மணக்க மறுத்தனர். பேதைப்பெண் தவித்தாள். மருவகால எண்ணங்கள் அவள் மனக்கண் முன் அடிக்கடி தோன்றலாரம்பித்தன.

வறுமை ஒருபக்கம் வாட்டுகிறது. வயதான அவள் அப்பா வரதாச்சாரியாருக்கோ வருமானமே மிகக்குறைவு. பெரும்பாலும் யாகம் வேள்விகளின் நிகழ்ச்சிகளில் [illegible] அவள் தாய். 'மூதேவி! மூலத்தில் பிறந்து எங்கள் மானத்தை கொட்டிக் கொள்ளுகிறாயே! எங்கேனும் தொலைந்துபோயேன்' இது அவள் தாயின் வாழ்த்து. கோபத்தில் குப்பின் தாயம்மா வாள் மகள்நிலைமைக்கு. பக்கத்துவீட்டாரும் பலபடியாகப் பேசுவது அவள் காதில் விழுந்தது. பேதைப் பெண் எதைத்தான் சகிப்பாள். தற்கொலை செய்துகொள்ள எண்ணியதுண்டு ஆனால் நடக்கவில்லை. மனக் கலக்கத்துடன் மங்கை நீராடிவிட்டு வீடு நோக்கி விரைந்தாள். மணப்பேச்சின் முடிவு அறிய. கூடத்தில் வந்தவர்கள் அம்மாவுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டாள். மங்கையின் மலர் முகம் கருத்துச் சிறுத்தது. காரணம் வந்தவர்களும் நட்சத்திரம் சொல்லிப் பார்ப்பதுதான். வெந்த புண்ணில் வேலை நுழைப்பது போன்றிருந்தது அவளுக்கு. அறைக்குச் சென்று அழுது புரண்டாள். வேதனையால் வெதும்பினாள். அன்றிரவை வேதனையுடனேயே கழித்தாள். பொழுதும் புலர்ந்தது. குடத்துடன் ஆற்றுக்குக் கிளம்பினாள். மூல நட்சத்திரம்—மூதேவி—என்ற வசைச் சொற்கள் மாறி மாறி அவள் காதில் ஒலித்துக்கொண்டிருந்தன. நடந்துகொண்டே இருந்தாள். ஆற்றுப்படியில் இறங்கினாள்.

'சாந்தா!' என்ற ஒலிகேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். அவளுக்கு ஒன்றும் ஓடவில்லை. பேச எழுந்த நாக்குத் தமோறியது. எங்கோ பார்த்த முகம், கவர்ச்சி நிறைந்த பார்வை புன் முறுவல் ஓடிவிளையாடும் உதடு. யார் என்று கேட்க மனம் விழைகிறது. ஆனால் சொல் வரவில்லை. பின் நினைவு வந்தது. அவளை அறியாமலே அவள் நாவு 'சந்திரா' என்று ஒலித்தது. ஆம்! என்றான். ஏதோ சொல்லவாய் எடுத்தான். ஆனால், யாரோ வருவதைக் கண்டதும் மறைந்துவிட்டான்.

அன்றிரவு உறக்கம்கொள்ள கொள்ளவில்லை. "சந்திரன்" ஆம்! அவளுடன் ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்த சந்திரன்! ஒன்பதாம் வகுப்பில்தான் கடைசியாகப் பார்த்தாள். [illegible] பிறகு இப்பொழுதுதான் [illegible] தாள். அவன் சாந்தா! என்ற[illegible] வாடிய செடிக்கு தண்ணீர்வார்த்ததுபோன்றிருந்தது அவளுக்கு. அவனிடத்தில் எப்படியோ ஈடுபட்டுவிட்டது அவள் மனம். கண்ணைமூடினாலும் அவன் உருவம் காட்சியளிக்கிறது.

மறுநாளும் ஆற்றுக்குச்சென்றாள் அவனும் சொல்லிவைத்தாற்போல் காத்திருந்தான் பேசவில்லை, ஒரே சிரிப்பு! அவளும் சிரித்துவிட்டாள் அந்தச் சிரிப்பில் எவ்வளவு பொருள்கள் அடங்கியிருந்தன என்பதனை அன்று இரவுதான் அறிந்தாள்.

மூன்றாம்நாளும் ஆற்றுக்குச் சென்றாள். அன்று சிரிப்பில்லை. ஆனால் அவளைக் கொல்வான்போல் நோக்கினான் கடைக்கண்ணால். ஒரு கடிதம் கொடுத்தான் அதை அவள் அங்கே பிரிக்கவில்லை இரவு படுக்கையில்தான் பிரித்தாள்.

"சாந்த! எனதன்பே நான் உன்னை என் உளமாரக் காதலிக்கிறேன். என் தமிழ்மேல் ஆணை. நாளை சென்னை செல்கிறேன். உன் விருப்பம் அறிய ஆவல்! எனவே உனக்காக உன் தெருக்கோடியில் காத்திருப்பேன். மணி ஒன்பதுக்கு என்னை அந்த சந்தித்து முடிவு தெரிவிக்கவேண்டுகிறேன். இப்படிக்கு

சந்திரன்

[illegible] என்னென்னவோ எண்ணினாள் ஒரு முடிவும் தோன்றவில்லை மணி எட்டு அடித்தது. புரண்டு கொண்டேயிருந்தாள் மூல நட்சத்திரம் தோன்றியது முடிவும் தோன்றியது. ஆம்! சந்திரன் முதலியார் வகுப்பைச் சேர்ந்திருந்தால் என்ன? இளைஞர்கள் நாம் ஏற்படுத்திக் கொண்டதுதானே! "பெண் மூலம் நிர்மூலமாம், ஆம்! நிர்மூலமாக்குகிறேன். இன்றே இச்சமூகக் கட்டுகளை என்னளவில் நிர்மூலமாக்குகிறேன். என்று படுக்கையை விட்டெழுந்து உடையை மாற்றினாள். கனவேகமாக வெளியேறினாள், காதலனைக் காண குறித்த இடத்தில் இருவரும் சந்தித்தனர்.

"சாந்தா! நான் இப்பொழுது சென்னையில் ஒரு பத்திரிகைக்கு உதவி ஆசிரியனாயிருக்கிறேன். அதில் வரும் வருமானமே நம் வாழ்க்கைக்குத் தாராளமாகப் போதும். நாளைக் காலை வண்டிக்குச் சென்னை செல்கிறேன் உன் விருப்பத்தைத் தெரிந்துகொள்வதற்காகவே கடிதம் எழுதினேன். என்னை மணந்துகொள்ள உனக்கு விருப்பம்தானே!" என்றான் சந்திரன்.

ஒரே ஒரு நிபந்தனை! என்றாள் சாந்தா.

'என்ன அது, சொல்' என்றான் சந்திரன்.

நான் மூல நட்சத்திரத்தில் பிறந்தவள். அதனால் பெண் மூலம் நிர்மூலமென்று எல்லோரும் என்னைத் தட்டிக் கழித்துவிட்டனர் அதுபோல் தாங்களும்............

சாந்தா நான் மூடநம்பிக்கையுள்ளவனல்ல. சாதி-சமயத்திற்குச் சாவு மணி யடிக்கப்படுமென்று எதிர்பார்ப்பவன். கண்டிப்பாக மூலநட்சத்திரமென்ற கற்பனைப் பேயைக் கண்டஞ்சேன் கண்ணே! கவலை கொள்ளாதே, நம் காதலுலகில் கருத்தொருமித்து வாழ்வோம்' என்றான்.

அற்றம் கரையில் சந்தித்த [illegible]ன் இப்பொழுது [illegible]ரயில் அமர்ந்து அளவ[illegible]ளாவிக்கொண்டிருக்கின்றனர். அவன் இங்கே தன் மனைவியுடன் [illegible] ஆசையாய்ப் பேசிக்கொண்டிருக்கின்றான். ஆனால் அங்கே அவளைச் சார்ந்த வைதீகக் கும்பல் கூப்பாடு போடுகிறது. ஏன்? அவள் மனதிற்குப் பிடித்த மணாளனை மணந்தது குற்றமாம் சமூகத் துரோகமாம். பிராமண சமூகத்திற்கே பெரும் துரோகம் செய்து விட்டாளாம். அதனால் அவள் ஓர் சமூகக் குற்றவாளியாம்.

குற்றவாளியார்? அவள் மணத்திற்குத் தடையாயிருந்த மூல நட்சத்திரமா? பெண் மூலம் நிர் மூலம் என்று கூறி கழைய வழக்கமா? மூதேவி, மூதேவி என்று திட்டிய அவள் தாயா? கருத்துக்குப் பொருத்தமில்லாத கட்டுப்பாடுகளையுடைய மூட சமூகமா? வல்லது மனதிற்குகந்த மணாளனுடன் வாழ்க்கை நடத்துகின்ற அவளா?

எது எப்படி இருந்தாலும், மூலநட்சத்திரம் அவளையோ அல்லது அவளை மணந்த அவனையோ ஒன்றும் நாசம் செய்து விடவில்லை. நாளுக்கு நாள் அவர்கள் பகுத்தறிவுப் பாதையில் முன்னேறிக்கொண்டிருந்தனர்.

மணமான அடுத்த ஆண்டில் அவன் சொந்தத்தில் ஒரு பத்திரிகையோட்ட ஆரம்பித்தான். பத்திரிக்கைக்கு மூலநட்சத்திரம் என்ற பெயரைச் சூட்டினான் ஏன்? அது அவளை வைதீகர்களிடமிருந்து பிரித்து, அவன் வாழ்க்கைத் துணைவியாக்கி வைத்ததால், அந்தப் பெயரைச் சூட்டினான்.

சென்னையில் மூலநட்சத்திரம் [illegible] வாசகர்களின் அன்பையும் ஆதரவையும் அமோகமாகப் பெற்றது.

அதிர்ஷ்டம்

S N S. நீடின்பன்

உலகோர் தம் வாழ்நாளில் அடைகின்ற வெற்றிகளையும், அல்லது உயர்வுகளையும் குறித்து உரையாடும்போது "ஸ்டார்" என்றும், "லக்" (Luck) என்றும், "சுக்கிர தசை" என்றும், "அதிர்ஷ்டம்" என்றும் பற்பல பதங்களால் பேசுவதைக் கேள்விப்படுகின்றோம்.

'அதிர்ஷ்டம்' என்ற சொல்லுக்கு யாதாவது அர்த்தம் இருக்கிறதா என்று அலசிப் பார்ப்போமேயானால், ஏதும் புலப்படாத ஒரு சூன்யமே என அறியலாம். அதிர்ஷ்டம் என்பதாக ஒன்று—அதாவது வெற்றியளிக்கும் நிகழ்ச்சி என்றுசொல்லப் படுவது அனைவருக்கும் உண்டா என்றால், அதுவும் சொல்லமுடியாத எக்கச்சக்கமான நிலையில் அதிர்ஷ்டம் என்ற சொல்லும் அதற்குரிய பொருளும் சொல்பவர் பலர்.

ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒருசமயத்தில் அதிர்ஷ்டம் இருந்தே தீரும் என்று சொல்லப்படுகிறது. அதிர்ஷ்டம் என்ற ஒரு அரிய பொருளோ அல்லது நிகழ்ச்சியோ உலகில் இருக்குமானால் உலகம் ஏன் அதனால்உய்யாது போகவேண்டும்.

அதிர்ஷ்டம் என்பதை ஒரு காரியத்தின் துணிவுப் பொருளாகக் கொள்ளுவோமானால் அந்தக் காரியம் வெற்[illegible] யக்காரணம் ஏதாவது இருந்தே தீரவேண்டும். அதிர்ஷ்டம் ஒரு காரியத்தின் வெற்றியானால், அதற்குரிய காரணம் தெரியவேண்டும். அப்படி காரணம் தெரிந்தபின்னர்தான், காரியம் கைகூடவோ அல்லது வெற்றியடையவோ இடம் ஏற்படும். அவ்வாறு இடமேற்பட்டு வெற்றியடைந்தால், அதனை அதிர்ஷ்டம் என்று சொல்லமுடியுமோ? முடியாது.

அதிர்ஷ்டம் ஏற்படுவது எதிர்பாராத நிகழ்ச்சிக்கு என்றும் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 'செட்டியார் வீட்டுக் கழனியிலே நல்லசெழிப்பு; தம்பி நம்ப முதலியார்வீட்டு கழனியைப்பார். கருகிப் பாய் கரம்பாகிக் கிடக்கிறது!"

"அதற்கெல்லாம் அதிர்ஷ்டம் வேணுமப்பா, அதிர்ஷ்டம்!"

"தங்கப்பட்டிச்சந்தையிலே சின்னப்பட்டணம் பெருத 'செவி'யை அறுபது ரூபாய்க்கு விற்றான் ஐயப்பச்சாமி. ரூபாய் நூறுபோட்டுவாங்கிய நம்ப 'கருப்பனை' கால்நூற்றுக்குத் தான் மதிப்பிடறாங்க. அதற்கெல்லாம் அதிர்ஷ்டம் செய்திருக்கணுமப்பா!"

"இராமு ரூபாய் ஒன்றே கொண்டுவந்தான், கோபுவின் ரூபாய் ஐந்தும், கிச்சுவின் ரூபாய் பத்தும் இராமுவின் கைக்குவந்துவிட்டதே. இராமு வழக்கம்போலத் தோற்பான். இன்றோ அவனுக்குப் பெரு வெற்றி வரும்போது நரிமுகத்தில் விழித்துவிட்டுவந்தான் போலிருக்கிறது! நல்ல அதிர்ஷ்டமடா அவனுக்கு!"

"தெருவிலே எடபோது பார்த்தாலும் திரிந்துகொண்டிருப்பானே தண்டச்சோற்று கண்டபாணி போன மாதம் கிண்டிக் குதிரைப் பந்தயத்திற்குப் போனானும்; ரூபாய் ஐந்தோ என்னவோ கட்டினானும். இருபதனாயிரம் ரூபாய் அடித்ததாம் அவனுக்கு. இப்போது பார். அவன் காரில் போவதை அலட்சியத்தோடு, குஷாலாக! எதற்கும் அதிர்ஷ்டம் வேணுமப்பா!

இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சிகளால் அதிர்ஷ்டம் என்றும் பதம் பலவிதங்களில் பல பொருள்படும்படி உபயோகிக்கப்படுகிறது.

அதிர்ஷ்டம் என்பது எதிர்பாராதவிதத்தில் நன்மைக்கு முடிகிறதென்றால், அதற்குப் பலகாரணங்கள் இருக்கலாம். செயல் செய்யும் நேரமும், கருவிகளும், உபகாரணங்களும், சூழ்நிலைகளும் அதற்கு சால்புடையதாகவும் இருக்கலாம். அவ்வாறு பலவித உபகாரணங்களுடன்—வசதிகளுடன் கூடிய ஒரு செயல வெற்றியுடன் முடிவு பெறுவது கண்கூடு.

போர் மூண்டது; விளைபொருட்கள் மக்கட்தொகுதிக்கு போதவில்லை; பொருள்களின் விலைகள் ஒன்றுக்குப் பல மடங்குகளாகப் பெருகின. பலர் சிறிய தொகைகொடுத்து வாங்கிய பொருள்களை [illegible]க்கு விற்று [illegible]பினர். [illegible] யாக சொல்லப்போவோமேயானால் பதுக்குதல் மூலம் கருஞ்சந்தையில் விற்றுக்காசு சம்பாதித்தார்கள்; செல்வர்களானார்கள். அப்படிப்பட்டவர்களை மற்றவர்கள் 'அதிர்ஷ்டக்காரர்கள்' என்று அழைத்தால், அறிவுடன்பட்ட செயலாகுமா?

அதிர்ஷ்டம் என்பது அறிவின்மையால் சொல்லப்படும் சொல்லாகும். அப்படியில்லாமல், 'விதி' என்னும் சொல் எப்படி மாந்தர்களின் அறிவீனத்திற்கு முதற்படியாக இருக்கிறதோ, அப்படியே இந்த 'அதிர்ஷ்டம்' என்ற சொல்லும் மாந்தர்களின் அறிவுக்கும், செயல் அல்லது வாழ்க்கையின் அன்றாட தலையீடுகளுக்கும் முட்டுக்கட்டையாக இருந்து தொல்லைப் படுத்தும் சொல்லாக இருக்கிறது. ஆக, 'அதிர்ஷ்டம்' என்பது ஓர் அர்த்தமற்ற சொல்லாகும்; அதை நீக்கிவிடலே அறிவுடைமையாகும். அர்த்தமற்ற 'அதிர்ஷ்டம்' ஒழிக!

ஆயுத உதவி அளிக்க முடியாது

லண்டன், ஏப். 7—

இஸ்ரேலுக்கு ஆயுதங்களை சப்ளை அளிக்க முடியாதென்று பிரிட்டிஷ் சர்க்கார் மறுத்துவிட்டது. அரபு நாடுகளுக்கு இரண்டாவது ரவுண்ட் [illegible] எண்ணமில்லை என்றும், இஸ்ரேலுக்கு ஆயுத சப்ளைகளைச் செய்வது என்பது அரபுநாடுகளுடன் ஏற்பட்டுள்ள உடன்படிக்கையை மீறுவதாக ஆகும் என்று ஒரு பிரிட்டிஷ் அதிகாரி கூறினார்.

பள்ளியைப் பாசறையாக்கப் பணம் வசூல் செய்யும் அக்ரமம்!

மந்திரிகளுக்கு 'ஆரத்தி' எடுக்கும் பெண்களுக்கு ஆதரவா?

ராஜஸ்தானில் சாஸ்திரியார் நடத்தும் 'ராமராஜ்யம்'

ராஜஸ்தானத்தின் முதல் மந்திரியாகக் காங்கிரஸ் தாப்பில் பதவி வகிக்கும் தோழர் ஹிராலால் சாஸ்திரி ஆட்சிப் பீடத்தில் உள்ள காரணத்தால், பெற்றஅதிகாரத்தை எவ்வளவு அகம்பாவத்துடன் உபயோகிக்கிருரென்பதை 'ஆட்டம் நிருபர் எடுத்துக் கூறுகிருர். முதலாளிகளின் கைப்பாவையாக ஆட்சி நடத்தும் தோழர் சாஸ்திரி தான் நடத்தும் வனஸ்தலி பள்ளியின் பேரால், எவ்வளவு பணத்தைத் திரட்டி வடுகிருரென்பதே இதற்கொருபெரிய எடுத்துக் காட்டு.

பல தொழில்களை நடத்தும் 'சேத்ஜி ஒருவர்' அரசியலாரின் ஆசி அவருக்குப் பூரணமாகஇருக்குமெனத் தோழர் சாஸ்திரி வாக்களித்ததின் பேரில் ரு. 20000 இப்பள்ளிக்கு நன்கொடை அளித்தாரென்று நம்பகமாகத் தெரிவிக்கப்படுகிறது. தோழர் ஹிராலால் சாஸ்திரியால் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளி லட்சக்கணக்கில் நிதி திரட்டப்படுவதற்குக் கண் துடைப்பாக உபயோகப் படுத்தப்படுகிறது. சமீப காலம் வரை கிராமப்பெண் பள்ளியாக இருந்த வனஸ்தலிபள்ளி ஹிராலால் சாஸ்திரி ராஜஸ்தான் முதல் மந்திரியான பின்புதான் முக்கியத்துவம் [illegible] லட்சம் ரூ [illegible] விதி' இப் [illegible] பிக்கப்படுகிறது! ஏனென்றால் முதல் மந்திரி சாஸ்திரிதான் எப்பொழுது பார்த்தாலும் இப்பள்ளியில் சென்று உட்கார்ந்துகொள்கிருரே!

சாஸ்திரியின் மனைவி வனஸ்தலியிலேயே எப்பொழுது பார்த்தாலும் இருக்கிருர். சமீப காலம்வரை இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த ப்ரேம் நாராயண மாத்தூர், இன்று ராஜஸ்தானின் உள்நாட்டு மந்திரியாகிவிட்டார்!

மக்கள் எப்பொழுது பார்த்தாலும் வனஸ்தலி பள்ளியைப் பற்றித் தூற்றிக்கொண்டிருந்தாலும் உயர்ந்த அதிகாரிகளும், மந்திரிகளும், காங்கிரஸ் தலைவர்களும், தொழில் முதலாளிகளும், வனஸ்தலி பள்ளிக்கு ஓயாமல் சென்றுகொண்டிருக்கிருர்கள். ஜெயப்பூருக்கு 35 மைல் தொலைவிலுள்ள இந்த இடம், புதிதாகப் பாதை போட்டு நகருடன் இணைக்கப்பட்டது டெலிபோன் வசதி, விமானம் இறங்கும் நிலையம் மற்ற எல்லா வசதிகளும் அச்சிற்றூருக்குச் செய்து தரப்பட்டுள்ளன.

இப்பள்ளியில் 250 பெண்களே படிக்கிருர்களென்றும், ராஜஸ்தானிலுள்ள பெண் கல்லூரி எதற்கும் இப்பள்ளிக்கு ஆகும் செலவாவதில்லை. மேல் வகுப்புகளில் படிக்கும் மாணவிகளைவிட ஆசிரியர்களே அதிகமாக உள்ளனர். சாஸ்திரி அரசாங்கத்திடமிருந்து அதிகமாக உதவி பெறுவது இப்பெண்பள்ளியில் இருந்துதான்.

எத்துறையிலும் சிறப்பு பெருத இப்பள்ளிக்குப் பொது மக்கள் பணம் ஏன் இப்படி வாரி இறைக்கப் படுகிறதென்பது பலருக்கு விளங்கவில்லை.

இப்பள்ளி மாணவிகள், தோழர் சாஸ்திரி வரும்போது அவரைப் புகழ்ந்து பாடப் பழக்கப்படுத்தப் பட்டுள்ளனர். ராஜப்ரமுக் இப்பள்ளிக்கு வந்திருந்த போது, மாணவிகள் 'ஆரத்தி' எடுத்தார்களென்ருல், இப்பள்ளியில் நடக்கும் பக்தபத்திச் செய்கைகள் விளக்கப்படவும் வேண்டுமா?

திராவிடப் பெண்மணிகளே!

இந்த சமூகக் கொடுமைகளில் பல்லாண்டுகளாக நமது நிலை சகிக்கமுடியாததாக இருக்கின்றது. இந்து சட்டம் என்பதிலே, பெண்களாகிய நமக்கு உரிமையோ, சமத்துவமோ, இல்லை. சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார், இத்தகைய குறைகள் சிறிது நீங்கும் வண்ணம் இந்தச் சட்டத்திலே திருத்தங்கள் கொண்டு வருகிருர். இத்திருத்த சட்டத்தை நிறைவேற்ற நமது ஆதரவை அனுப்பத் தெரிவிக்கும் பொருட்டு 12—4—50 புதன் மாலை 3 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில், திராவிட பெண்கள் மாநாடு கூடுகின்றது. பெண்களுக்குக் கட்டணமில்லை. தாய்மார்களும், மாணவிகளும், ஆசிரியைகளும் திரண்டு வந்து மாநாட்டைச் சிறப்பிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அலமேலு அம்மாள்
(அமைப்பாளர்)
திராவிட முன்னேற்றக் கழக பெண்கள் மாநாடு

நீதி தேவன் மயக்கம்!

லண்டன், ஏப். 8—

ஒரு ஆங்கில மாதை கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, வழக்கு தொடரப்பட்ட போலந்து வாசி பீடர் மச்ஸி மௌக்ஸி நீதிபதியிடம் தன்னைத் தூக்கிலிட வேண்டாமென்றும், ஆனல் சுட்டுக் கொள்ள உத்திரவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இக்கோரிக்கைக்கு இணங்க தனக்கு அதிகாரமில்லை என்று நீதிபதி கூறிவிட்டார்.

ஆயிரத்தில் ஒரு அதிகாரி!

மைசூர், ஏப். 8—

"70 ரூபாய் கனமுள்ள ஒரு வெள்ளித் தட்டைத் பையில் போட்டுக்கொண்டு வந்து லஞ்சம் கொடுக்கும் வகையில் என்னுடைய வீட்டில் விட்டுச் சென்ருர்" என்று ஐயங்கார் என்னும் பழ வியாபாரிமீது மைசூர் வாடகைக் கட்டுப்பாடு அதிகாரி தோழர் எஸ். ஏ. கனி புகார் செய்தார்.

வாடகைக் கட்டுப்பாடு அதிகாரி இந்தப் பழ வியாபாரியின்மீதுள்ள வழக்கொன்று விசாரிக்கப்பட வேண்டி இருக்கிறது.

போலீசார் புலன் விசாரித்து வருகிருர்கள்.

ஆர்ஜென்ட்டினு பற்றி பிரிட்டிஷ் சமாதானம்

போனஸ் அயர்ஸ், ஏப். 8—

பிரிட்டிஷ் உணவு மந்திரி மாரிஸ்பெப் பமர்லிமென்டு விவாதத்தில் ஆர்ஜென்டினவைக் குறித்து அவதூறு சொன்னதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு சமாதான குறிப்பை அனுப்பியிருக்கிறது.

இதை ஆர்ஜென்டின அயல் நாட்டிலாகா பரிசீலனை செய்து வருகிறதென்றும், சீக்கிரமே பிரிட்டிஷ் ஆர்ஜென்டின வர்த்தக உடன்படிக்கை ஏற்பட்டுவிடும் என்றும் சொல்லப்படுகிறது.

சங்கரரெட்டி ராஜினமா?

கர்நூல், ஏப். 7—

சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் உதவி தலைமைப்பதவியைத் தான் ராஜினமாச் செய்துவிட்டதாக, மேல் சபை அங்கத்தினர் தோழர் சங்கரரெட்டி கூறியதாகத் தெரிகிறது.

கட்சியில் கோஷ்டிகள் இருப்பதாகவும் அதனுல்தான் உதவி தலைமைப் பதவியைத்தாம் விரும்பவில்லையென்றும் அவர் கூறினர்.

உலகத்திலேயே பெரிய தியேட்டர்

அவன்ன, ஏப். 8—

1,42,50,000 ரூபாய் செலவில் உலகத்திலேயே பெரிய தியேட்டர் அவன்ன நகரில் கட்டப்படுகிறது.

இந்தக் கொட்டகையில் 6750 பேர் உட்கார முடியும். [illegible] வின் நீளம் 120 அடி. [illegible] 60 அடியாகும். 1000 [illegible] விட்டு வைக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

மேடைமீது பனிக்கட்டி உறைவச்செய்து சாக்பிச் செல்லும் விளையாட்டும் நடத்தப்படலாம்.

சென்னை மாவட்ட தி. மு. கழக கிளைக் கழகங்களுக்கு

இந்திய யூனியன் சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார், தான் கொண்டுவர இருக்கும் இந்துச் சட்ட திருத்த மசோதாவிற்குப் பொதுமக்களின், ஆலோசனையைக் கோரி, அவ்வபிப்பிராயத்தை உடனே தனக்கு 14-4-50-க்குள், அனுப்பிவிட கேட்டுள்ளார்.

அச்சட்டத்தில் அவர் செய்திருக்கும் திருத்தங்கள், இந்து பட்டியலில் அடைபட்டிருக்கும் திராவிடப்பெருங்குடி மக்களுக்கு இன்றியமையாதனவாக இருத்தலால், நமது மாவட்டத்திலுள்ள கிளைக்கழகங்கள் அத்துணையும், உடனே தங்கள், கமிட்டிக் கூட்டங்களைக் கூட்டி, அவரது திருத்த சட்டத்தை ஆதரித்து தீர்மானங்கள் நிறைவேற்றி 12-4-50 க்குள் நியூடெல்லி அவரது முகவரிக்கு, தந்திச் செய்தியோ, விமானத் தபால் செய்தியோ அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

கே. கோவிந்தசாமி
செயலாளர்
சென்னை மாவட்ட தி. மு. க.

நாடெங்கும் அழகிரியின் நினைவு நாள்

உக்கடபாளையம்

2—4—50 அன்று இவ்வூர் தி. மு. க. வின் சார்பில் ஞாயிறு காலை தோழர் மு. பிரஹலாதன் தலைமையில் அழகிரி நினைவு நாள் கூட்டம் கழக மனையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. சுந்தர்ராஜ், அ. அ. வீரராகவன் ஆகியோர் அழகிரியின் தொண்டைப்பற்றி விளக்கமாகவும் தெளிவாகவும் பேசினர். தலைவர் முடிவுரைகூற நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

சத்தியமங்கலம்

இவ்வூர் தி. மு. க. சார்பில் அஞ்சா நெஞ்சன் அழகிரி நினைவு நாள் பொதுக் கூட்டம் 3—4—50 அன்று நடைபெற்றது. அதுபோது பல தோழர்கள் அழகிரியின் தொண்டினைக் குறித்துப் பேசியபின், சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறியபின், நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

திருமால்பூர்

இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பாக 3—4—50 அன்று இரவு பொன்னியம்மன் கோவில் மேடையின் மீது, அழகிரியின் நினைவு நாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர் எம். ஜெயராமன் தலைமை வகித்தார். அதுபோது தோழர்கள் ஆடிமாறதம், வடிவேலு, குமாரசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றியபின் நன்றி கூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

செல்வபுரம்

3—4—50 திங்கள் இரவு அஞ்சா நெஞ்சன் அழகிரி நினைவுநாள் [illegible] ஆர். ஆறுமுகம் அவர் தலைமையில் கழகக் கட்டிடத்தில் கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் அஞ்சா நெஞ்சன் அழகிரி குறித்துப் பேசினர். இறுதியில், தற்பொழுது கழகத்தில் நடைபெற்றுவரும் இரவுப்பள்ளியின் பெயரை மாற்றி (ஈ. வே. ரா. இரவுப்பள்ளியை) அழகிரி சாமியின் நினைவாக "அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி இரவுப்பள்ளி" என்று அழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. எல்லோரும் அன்னருக்கு வீரவணக்கம் செலுத்த விழா இனிது முடிவுற்றது.

லால்குடி

3—4—50 திங்கள் மாலை சிவன் கோவில் முன்பு தி. மு. கழகத்தின் சார்பில் அழகிரி நினைவு நாள் கூட்டம் கொண்டாடப்பட்டது. அதுபோது செயலாளர் தோழர் சிவப்பிரகாசம் அவர்கள் தலைமை வகித்தார். அடுத்துத் தோழர்கள் ஜி. அரங்கசாமி, டி. கே. சீனிவாசன் ஆகியோர் தி.மு.கழககொள்கைகளை விளக்கமாக ஒரு மணி நேரம் பேசினுர்கள். அடுத்துத் தோழர் சி. வி. சித்ரரசு அவர்கள் நம் நாட்டு அரசியல் நிலைமைப்பற்றியும் அழகிரியின் குணம்பற்றியும் சுமார் 2 மணி நேரம் பேசினர். தலைவர் முடிவுகூற விழா இனிது முடிவுற்றது.

காரைக்குடி

3—4—50 இரவு இக்கர் காந்தி திடலில் நகர தி. மு. கழக சார்பில் மதுரை தோழர் ராசமாணிக்கம் தலைமையில் மறைந்த மாவீரனுக்கு வீர வணக்கம் செலுத்திய பிறகு, தோழர் மு. சகுணுநிதி அவர்கள் நீண்டநேரம் உணர்ச்சி ததும்பிய சொற்பொழிவாற்றினுர்.

தலைவர் முகவுரைக்குப்பின் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களுக்கும் மற்ற ஏனையோர்க்கும். அஞ்சா நெஞ்சன் உருவப்படத்துடன் கூடிய "இலட்சிய வாதி அழகிரிசாமி" என்ற புத்தகத்தை நகர தி. மு. கழகத்தார் சார்பில் வழங்கப்பெற்றது.

பெங்களூர்

பெரியார் ராமசாமி நகர் தி. மு. க. கிளையின் அழகிரி நினைவு நாள் கூட்டம் 2—4—50 மாலை தோழர் பெ. ம. துரைசாமி அவர்கள் தலைமையின் கீழ்நடை பெற்றது. தோழர் ராமசாமி அவர்கள் அழகிரியின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் பாடலைப் பாடினர். அடுத்துத் தோழர்கள் பூங்காவனம், மூ. சி. வேணு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

சென்னை புளியந்தோப்பு

மறைந்த மாவீரன் அழகிரி நினைவுநாள் விழா 3—4—50 அன்று மாலை தோழர் நாராயணசாமி அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுபோது தோழர் எம். எஸ் கோவிந்தராசன் அவர்கள் விழா கொண்டாடும் முக்கியத்துவத்தைப் பற்றி ஒருமணி நேரம் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்ற, பிறகு இருவர்களுக்குள் நேரிடும் இனிப்புப் பண்டங்களும் வழங்கப்பட்டது. இறுதியிலுடன், செயலாளர் நன்றி கூற விழா இனிது முடிவடைந்தது.

பலராமபுரம் (மலையாளம்)

இவ்வூர் தி. மு. க. சார்பில் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி நினைவு நாள் கூட்டம் 2 4—50 அன்று மாலை எஸ்.பி.எம். வாசிப்பு சாலையில், நடைபெற்றது. கழகச் செயலாளர் தோழர் ச. நடராஜன் அவர்கள் முன்மொழிய மாவட்ட அமைப்பாளர் (திருவனந்தபுரம்) ஆ. அருணுசலம் அவர்கள் தலைமை தாங்கினர். தலைவர் முன்னுரைக்குப் பின் அழகிரிசாமிக்கு தோழர்கள் மரியாதை செய்தனர். தோழர் எம். என். அரசு அவர்கள் அழகர் சாமியின் கட்சித் தொண்டைக் குறித்து விரிவாகப் பேசினர்.

கடைசியாக, தலைவர் முடிவுரைக்குப்பின். கூட்டம் இனிது முடிவுற்றது.

திருச்செங்கோடு

அஞ்சாநெஞ்சன் அழகிரி நினைவு நாள் 2—4—50 ஞாயிறு மாலை 40 கால் மண்டபத்தின் முன், தி. மு. க. சார்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் டி. எஸ். தங்கவேலர் தலைமை வகித்தார். மறைந்த மாவீரன் அழகிரியின் தொண்டைப்பற்றி தோழர்கள் டி. ஏ. அய்யாவு, கு. காவேரி, என். பி. சதாசிவம், டி. எம். மகாலிங்கம், என் கே, பி. வேல் ஆகியோர் பேசினுர்கள்.

தலைவர் முடிவுரை கூற, தோழர் சண்முக சுந்தரம் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

இந்து சட்டத்திருத்த மசோதா ஆதரிப்பு நாள்

"14—4—50ல் இந்து சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்றுவதற்காக, இந்திய மக்களின் கருத்தறிய அதிதற்காக புது டில்லியில் அப்போர் அம்பேத்கார் அவர்கள் ஓர் மாநாட்டை கூட்டப் போகிருர். அம்மாநாட்டிற்குள் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு சீர்திருத்த நோக்கம் கொண்ட இயக்கங்களும், குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் சம்மேளனமும் பொதுக் கூட்டம் கூட்டி தீர்மான மூலமோ—தந்தி மூலமோ இந்த சட்டத் திருத்த மசோதாவை ஆதரித்து அனுப்புமபடி கேட்டுக் கொள்கிறோம். அதன் காபி ஒன்று (அமைப்பாளர், தமிழ்நாடு பெடரேஷன் ஆம்பூர் வ. ஆ.) எமக்கு அனுப்பவேண்டுகிறோம்"

என தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர். சம்மேளன அமைப்பாளர் தோழர் கே. எம். சாமி எழுதினர்.

"சிந்தை துடிக்குதடா!"

[வித்வான், இல. அரவரசன்]

சிந்தை துடிக்குதடா—தமிழா
வெந்திடும் புண்போலே
நிந்தனை ஆகுதடா தமிழா
நிலையை நினைத்தாலே
வந்தவர் ஆட்சியிலே தமிழா
வாழ வழி யுண்டோ
உந்தன் உரிமை எல்லாம் தமிழ
சொந்தமா அன்னியர்க்கே
கந்த மூலம் புசித்தாய் தமிழா
காட்டினிலே திரிந்தாய்
அந்த நாளிற் கூட தமிழா
ஆனந்த மாய் வாழ்ந்தாய்
நூற்றுவர்க் கன்ன ரெல்லாம்—தமிழா
நொடியிற் பொடியாக
ஆற்றலுடன் போரில் தமிழா
அனைவரையும் வென்றாய்
சொந்த மொழியினி லே—தமிழா
சுந்தரப் பண்பாடி
சிந்தை மகிழ்ந் திருந்தாய்—தமிழா
செறுக குடன் வாழ்ந்தாய்
சாதிப் பிரிவு முண்டா—தமிழா
சாத்திரக் கொடுமையுண்டா
நீதியில் ஆட்சி யுண்டா—தமிழா
நெஞ்சினில் வஞ்ச முண்டா
குலத்திற் கொரு நீதி தமிழா
கூறிடும் நூல்களுண்டா
நம்பியே கும்பிடவும் தமிழா
கல்லிலே தார் கோவிலுண்டா
அந்தப் பெருமை எல்லாம் தமிழ
வார்த்து அடைந்திடவே
இந்த உலகினிலே தமிழா
என்ன நீ செய்திடுவாய்

இராமாயணம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதன் என்ற கருத்து இடம் பெற முடியும்?

இங்ஙனம் எந்த வழியில் பார்த்தாலும் போற்றிப் புகழவோ, அவசியமெனக் கருதவோ தகுதியில்லாத இராமாயணத்தைப் பற்றிப்பேச ஒரு கூட்டம் எற்றுக்கு? அதிலும் அணு குண்டு காலத்திலே உலகம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நிலையிலே இத்தகைய பணிதேவையானதுதானா? பயனுடையதல்லாவிடினும் பாதகம் விளைவிக்காமலேனும் இருக்குமா? இதனைச் செய்ய வேண்டாத நூலுக்கு விளக்கம் தர ஆச்சாரியார் போன்றவர்களின் அறிவு செலவிடப்படவேண்டாமா? நமக்குள்ளே இருக்கும் கருத்து வேறுபாடுகள் ஒரு புறமிருக்கட்டும். இதனால் ஆச்சாரியாருக்குத்தான் என்ன லாபம்? அதோ, அறிவுலகப் ஆச்சாரியாரைக் கண்டு நகைக்கிறது; அந்தோ வெட்கம்! வெட்கம்!!

பாரிஸில் கம்யூனிஸ்டு-போலீஸ் கைகலப்பு

60 பேர்கள் கைதி செய்யப்பட்டனர்.

பாரிஸ், ஏப். 8 —

நாஜி இரகசிய ஏஜெண்ட் எழுதி வைத்த டைரிக் குறிப்பை பிரசுரிக்க ஏற்பாடு செய்யப்பட்டதின் விளைவாக, பாரிஸில் கம்யூனிஸ்டு கலகம் ஏற்பட்டிருக்கிறது.

இதைப் பிரசுரிக்க முன்வந்தவரின் வீட்டை கம்யூனிஸ்டுகள் தாக்கவே, இவர்களை அடக்க போலீஸ்படையை தருவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கம்யூனிஸ்டுகளுக்கும் போலீசாருக்கும் ஏற்பட்ட கைகலப்பில் கற்கள், சோடாபுட்டிகள், கம்புகள் தாராளமாக உபயோகிக்கப்பட்டனவாம்.

இருதரப்பிலும் பலர் காயமடைந்தனர். சுமார் 60 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டட நிதி

—(0)—

	ரூ. அ. பை
முன் வரவு	127—0-0
அ. ச. சுந்தரமூர்த்தி, புரசைவாக்கம்	5-0—0
தி. மு. க. புதுக்கோட்டை கிளை	10—0—0
அலமேலு அப்பாத்துரை, சென்னை	5—0—0
ப. சுந்தரம், மதுரை	5—0—0
ச. இராமலிங்கம், திட்டகுடி	5-0—0
டி. இராமகிருஷ்ணன், பெருந்துறை	5—0—0
தி. செ. சிங்காரம், திருச்செங்கோடு	2—0—0
எம். எஸ். சுப்பிரமணியம், திட்டகுடி	4—0—0
	168—0—0

இந்து சட்ட திருத்த மசோதா ஆதரிப்பு

பெண்கள் மாநாடு

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பாக
12—4—50 புதன் மாலை 3-மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும்
தலைவர் :—மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார்
திறப்பாளர் :—டாக்டர். எஸ். தர்மாம்பாள்
பல தாய்மார்களும் கலந்துகொள்வர்

அலமேலு அம்மாள்
மாநாட்டு அமைப்பாளர்

இந்திய கலையைப்பற்றி...?

—(0)—

ஈரான் தூதுவர் கூறும் விவரம்

சென்னை, ஏப்ரல். 9—

கலை சம்பந்தபட்ட வரையில் இந்தியாவிற்கும், ஈரானுக்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுவதாகவும், இந்தியாவின் கலையை அறிய பாரசீகர்கள் பேரவா கொண்டு இருக்கிறார்கள் என்றும், சென்னைக்கு வந்துள்ள ஈரானின் ஸ்தானீகர் தோழர் நௌரி எஸ்பிடயாண்டார் குளோப் நிருபரிடம் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:—

சென்னை சர்வகலாசாலை சமஸ்கிருத பேராசிரியர் டாக்டர் குண்ஹன் ராஜா, ஈரான் சர்வ கலாசாலையின் சமஸ்கிருத பேராசிரியராக நியமிக்கப்பட்டிருப்பதிலிருந்தே இந்தியக் கலையையும், கலாசாரத்தையும் அறிந்துகொள்ள, பாரசீகர்களுக்[illegible] ஆவலை எளிதில் அறிந்து [illegible]ளாம்.

இதைப்போல அனேக இந்தியக் கலை நிபுணர்கள் ஈரானுக்கு வந்து, அங்கு இந்தியக்கலையை பாரசீகர்கள் அறியும்படி செய்யவேண்டும்.

ஈரானும் அதனுடைய கட்டிடக் கலை, சிற்பக்கலை, முதலியவைகளில் பேர் போனது. இவைகளில் சில முறைகள் இந்தியா, ஈரான் இரண்டிலும் ஒத்து காணப்படுகிறது.

சுமார் 2,500 வருஷங்களுக்கு முன்பு "அகாமீணீட்" என்ற வகுப்பினர் ஈரான் கலையை ஓங்கச்செய்தனர். புராதனமான எங்கள் கலையும், உங்கள் கலையை நாங்கள் அறியவும் ஏராளமான இந்தியர் எங்கள் நாட்டிற்கு வந்து போக வேண்டும்.

அமைதியை நாடிய அறிஞரின் தற்கொலை

புரபசர் மாத்திசன் என்ற அமெரிக்க இலக்கிய அறிஞர் ஒரு "ஹோட்ட"லின் 12-வது மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்துகொண்டார். இவர் இப்படித் தற்கொலை செய்துகொண்டு உயிர் துறக்க சர்வதேச அரசியல் நிலைமே காரணம் என்று சொல்லப்படுகிறது.

ரஷியா—அமெரிக்க பனிமூட்டத் தல் போர் வலுத்து வருவதால், உலக சமாதானத்தில் அவர் வைத்திருந்த நம்பிக்கை அழிந்து விட்டதாம். அத்துடன் ட்ரூமனின் அக்கீசனும் கடைப்பிடிக்கும் அமல்காட்டு கொள்கையும் அவருக்குப் பிடிக்கவில்லையாம். கம்யூனிச எதிர்ப்பு என்ற [illegible]யில் அரசாங்கம் அறிஞர்களுக்கு இழைத்து வரும் தொல்லைகள் பற்றியும் அவர் வருந்தினாராம்.

தற்கொலை செய்துகொண்ட மாண்ட அந்த அமெரிக்க அறிஞரைப்பற்றி பெரிய நாவல் ஆசிரியரான தோழர் ஹோவார்ட் பாஸ்ட என்பவர் "ரஷிய-அமெரிக்க பனிமூட்டத்தல் போருக்குப் பலியானவர்" என்று குறிப்பிடுகிறார்.

(நியூயார்க் டைம்ஸ்)

பரீட்சை விடைத்தாள் பார்சல் மறைந்த மாயம்!

விசாகப்பட்டினம், ஏப். 6—

மசூலிப்பட்டணத்திலிருந்து விசாகப்பட்டினத்திற்கு அனுப்பப்பட்ட ஆந்திர சர்வகலாசாலை பரீட்சை விடைத்தாள்கள் கொண்ட பார்சல் விசாகப்பட்டிணம் ரயில் நிலையத்தில் காணமற் போய்விட்டது. பாசஞ்சர் ரயிலில் நேற்றிரவு இந்தப் பார்சல் அனுப்பப்பட்டது.

வால்டேர் ரயில்வே நிலையத்தில் பார்சலை இறக்கிய கூலிகாட்கள் இது சம்பந்தமாகசந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். ரயிலிலிருந்து சார்டு கொடுத்த தகவலின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் முறையிலே வால்டேர்ரயில்வே நிலையத்திலுள்ள 'லைசென்ஸ்' பெற்றக் கூலிகள் இன்று வேலை நிறுத்தம் செய்தனர்.

பின்னர், அன்றைத் தினமே விசாகப்பட்டின தபாலாபீஸ் பகுதியிலிருந்து அந்தப் பார்சல்கள் கிடைத்துவிட்டதாகத் தெரிகிறது.

பொழுதுபோக்கு

தமிழ்

பிரபாத்	—	விஜயகுமாரி
சரஸ்வதி	—	,,
கெயிட்டி	—	,,
திருமகள் (சைதை)		வேதாளஉலகம்
மகாராணி	—	வாழ்க்கை
பாரகன்	—	,,
வீனஸ்	—	,,
சினிமாசென்ட்ரல்	—	சதிசுலோசனா
கமலி	—	லக்ஷ்மி

தெலுங்கு

பிராட்வே	—	குணசுந்தரி
வெலிங்டன்	—	,,
சன்	—	,,
கிரௌன்	—	சௌகார்
லட்சுமி	—	,,
சித்ரா	—	,,

ஆங்கிலம்

Casino	—	The Plunderers
Minerva	—	The Kid from Texas
Midland	—	Trader Horn
New Globe	—	Charlie Chaplin Festival
New Elphinstone	—	Chain Lighting

ஹிந்தி

சாகர்	—	நீச்சா-நகர்
அசோக்	—	பாரஸ்
ஸ்டார்	—	அனோகா பியார்
சயானி	—	ஆஜ் கி-ராத்
செலக்ட்	—	ஷப்னம்

இனி நடப்பவை

சென்னை:— முத்தியாலுபேட்டை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 11—4—50 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு 147 பவழக்காரத் தெரு, 'போர்வாள்' நிலையத்தில் நடைபெறும். அதுபோது, பல முக்கிய பிரச்னைகளைக் குறித்து ஆலோசிக்கப்படும்.

* * *

தஞ்சை:- இவ்வூர் லேபர் பாடசாலை ஆசிரியர் சங்க 6-வது ஆண்டு விழா 16-4-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு தோழர் ஏ. ஒய். அருளானந்தசாமி நாடார் கார்டனில் தோழர் எஸ். சுயம்பிரகாசம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் ஆரம்பமாகும். தோழர் ஐ. முத்தைசவரி அவர்கள் விழாவைத் திறந்துவைத்துப் பேசுவார்கள். தோழர் ஏ. ஆசீர்வாதம் அவர்கள் வரவேற்றுப் பேசுவார்கள். மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

[illegible]லைக்கழகக் [illegible]குழுப்பினர் பொதுக்கூட்டம் 11—4—50செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சென்னை, நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு, எண் 27 இல்லத்தில். அரசாங்கத்திற்கு விண்ணப்பம் அனுப்புவது பற்றி ஆலோசிக்கப்படும்.

* * *

சென்னை, தேனாம்பேட்டை:— நாடகக் கழகத்தின் சார்பில், காம்பிரஸ் மைதானத்தில் 'வாதட்சனை'' எனும் தமிழ் நாடகம் நடைபெறும். கவர்னர் தம்பதிகளும் கலந்து கொள்வர்.

* * *

மேலக்கோட்டையூர் சின்னையாபுரம்:—தி. மு. க. சார்பில், 11-4-50 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். கூட்டத்திற்குத் தோழர் எஸ். தங்கசாமி தலைமை தாங்குவார். அதுபோது தோழர்கள் ஈ. வெ. அ. வள்ளிமுத்து, எம். எஸ். இராமசாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் பேசுவார்கள்.

ஏஜெண்டுகளுக்கு!

மார்ச்சு 31-ந் தேதியுடன் இவ்வாண்டு கணக்கு முடிக்க வேண்டியிருப்பதால், நிலுவையுள்ள பாக்கி பூராவும் இம்மாதம் 10-ந் தேதிக்குள் அனுப்பிதரவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குப் பத்திரிகை நிறுத்தப்படும் என்பதை கண்டிப்பாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர், 'மாலை மணி.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.